தமிழ்நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, 1971 ஜூலை 21.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள்

* 340 வினா—திரு. என். மருதாசலம் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செகண்டரி கிரேட் ஆசிரியர்களாகப் பணியாற்றும் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்குப் பட்டதாரி ஆசிரியர் சம்பளம் வழங்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. என். மருதாசலம்: தலைவர் அவர்களே, செகண்டரி கிரேடு ஆசியர்களுக்கு இன்னும் பாதிச் சம்பளம் கொடுக்காமலிருக்கிறதே, அந்தச் சம்பளத்தைக் கொடுக்க அரசு உத்தேசிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதைப் பற்றிய குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அந்த விவரம் திரட்டித் தரப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : பொதுவாக, தொழிற்சங்க விதிமுறைகள்படி, எந்த வேலைக்கு ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கின்றாரோ அவர் அந்த வேலையைச் செய்யவேண்டுமென்றும் எந்தப் பணிக்காக அவர் ஒதுக்கப்பட்டிருக்கின்றாரோ, அந்தப் பணிக்குரிய ஊதியம் அவருக்குக் கொடுக்கவேண்டும் என்றும் இருக்கிறது. அப்படி இருக்கிறபோது, இம்மாதிரி பி. டி. பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு, சில காரணங்களுக்காக வேறு வேலை கொடுக்கின்றபோது, அந்த வேலைக்குரிய ஊதியம் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக இருந்து பணி புரிகிறபோது, தாங்களாகவே தங்கள் தகுதியைப் பெருக்கிக் கொள்ளுகிறார்கள். பி.ஏ., பி.டி. படித்தவர்களுக்கு "இம்மீடியட்" ஆக இரண்டு 'இன்க்ரிமென்ட்ஸ்' தரப்படுகின்றன. எம்.ஏ., பி.டி. படித்தவர்களுக்கு நான்கு இன்க்ரிமென்ட்ஸ் தரப்படுகின்றன. பி.ஏ., பி.டி. படித்தவர்களாயிருந்தாலும், எம்.ஏ., பி.டி. படித்தவர்களாயிருந்தாலும், அந்த பி.டி. ஆசிரியர் வேலை காலியாக இருக்கும்

போது அந்தப் பதவிக்கு வர அவர்களுக்கு உரிமை உண்டு. செகண்டரி கிரேடு ஆசிரியராக இருந்துகொண்டு பி.டி. கிரேடு ஆசிரியர் சம்பளம் வாங்குவது என்பதற்கு இப்பொழுது குறிப்புகள் இல்லை. இன்க்ரிமென்ட் மட்டும் தரப்படுகிறது.

திரு. கோ. இளங்கோவன்: பட்டதாரி ஆசிரியர்களின் ஊதியத்தை உயர்த்தும் திட்டம் அரசிடம் ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட திட்டம் அரசாங்கத்திடம் இல்லை. அவர்கள் கோரிக்கை தந்திருக்கிறார்கள். அதை நிதித் துறை ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, தற்போது முறைப்படி ஐ.ஏ.எஸ். பயிலாதவர்களுக்கு அவர்களுடைய சர்விசைக் கணக்கிட்டு, முறைப்படி ஐ.ஏ.எஸ். பயின்றவர்களுக்குத் தரப்படும் சம்பளம் போல—உயர் பதவி கொடுக்கப்படுவது போல—ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கும் செகண்டரி கிரேடு பள்ளி ஆசிரியர்களுக்கும், அவர்களுடைய கல்வித் தகுதிக்கேற்ப சம்பளம்கொடுப்பதில் நம்முடைய அரசு தாமதம் காட்டுவதற் குறிய காரணங்கள் யாவை என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அந்தந்தப் பதவிக்கு ஏற்ற அளவு தனிச் சம்பள விகிதங்கள் வகுக் கப்பட்டிருக்கின்றன. ஆகவே, பொதுவாக, செகண்டரி கிரேடு படித்துவிட்டு, ஹையர் கிரேடிலே ஆசிரியராக இருந்து, ஹையர் கிரேடு ஆசிரியருக்குரிய சம்பளம் பெற்று வந்ததைத்தான் அரசாங்கம் மாற்றியமைத்தது. தகுதிக்குரிய பதவியைப் பெற வேண்டுமேதவிர தகுதியில் முழு நிலையைப் பெற்றுவிட்டார் என்ற வுடனேயே அந்தச் சம்பளத்தைத் தர முடியாது. ஆனால் பி.ஏ., பி.டி., எம்.ஏ., பி.டி. படித்தவர்கள் பி.டி. அசிஸ்டென்ட் வேலை காலி ஏற்படுகிறபோது அதிலே சேர்ந்துகொண்டு அதற்குரிய சம்பளம் வாங்குவதற்கு உரிமையுடையவர்கள் ஆவார்கள். ஆகவே, அவர்கள் இருக்கும் பதவியில் இருந்துகொண்டே தங்கள் தகுதியை உயர்த்திக் கொண்டவுடனேயே அதற்குள்ள சம்பளம் 'தருவது என்பது இயலாது.

திரு. ஜே. ஜேம்ஸ்: செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் பலர் இந்த முறையில் தங்கள் முயற்சியால் தகுதிகளைப் பெருக்கிக்கொள்ளு கிறார்கள். பெருக்கிக்கொண்டும் பல ஆண்டுகள் அதே வேலையில் தான் அமர்ந்திருக்கிறார்கள். ஆனால், அதே சமயத்தில், நாம் உயர் நிலைப் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்களை நியமித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே இம்மாதிரித் தன் முயற்சியால் தகுதியைப் பெருக்கிக் கொண்டவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு அவர்களுக்கு முதலிடம் அளித்து, பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்கும்போது, அவர்களுக்கு நியமனம் அளிக்க இந்த அரசு முன்வருமா?

1971 ஜூலை 21]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அவர்கள் தங்களுடைய தகுதியை உயர்த்திக்கொண்டு, பி.டி. அஸிஸ்டெண்ட் வேலை பார்க்கும் தகுதி பெறும்போது அந்த வேலைகளை அவர்களுக்குத் தரலாம் என்று விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அப்படி இடங்கள் ஏற்படும்போது அவர்களுக்கு அந்த இடங்களை வழங்கலாம்.

* 341 வினா—**திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா--

செகண்டரி கிரேடு ஆசிரியர்களாகப் பணியாற்றுகின்ற பட்டதாரி ஆசிரியர்களைப் புதிதாக வேலைக்கமர்த்தும்போது மேற்கண்டவர்களுக்கு சர்வீஸ் அடிப்படையில் முதலிடம் அளித்து வேலையில் அமர்த்த அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அரசினர் பள்ளிகளிலும் கழக உயர்நிலைப்பள்ளிகளிலும் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்களில் பட்டப்படிப்பும், பி.டி. ஆசிரியர் பயிற்சியில் தேர்வும் பெற்றவர்கள் பட்டதாரி ஆசிரியர்களாகப் பதவி உயர்வு பெற தமிழ்நாடு கல்வி சார்புப் பணி தனி விதிகளிலும், மாவட்டக் கழகச் சட்ட விதிகளிலும் போதிய வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. உதவி பெறும் தனியார் பள்ளிகளில் நிர்வாகத்தினருக்கு அம்மாதிரிப் பதவி உயர்வு அளிக்க உரிமையுள்ளது.

திரு. என். மருதாசலம் : செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் பட்டதாரி ஆசிரியர்களாக மாறும்போது அவர்களுக்குப் பட்டதாரி ஆசிரியர்களுக்குரிய ஸீனியாரிடி பிரகாரம் பதவி உயர்வு கொடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அவர்கள் தகுதி பெற்றதற்குப்பிறகு பி.டி. ஆசிரியர்கள் ஆகிறார்கள். அதிலேதான் ஸீனியாரிடி பார்க்க முடியுமேதவிர, செகண்டரி கிரேடு ஆசிரியராக எத்தனை ஆண்டுகள் ஸீனியராக இருந்தார்கள் என்று பார்ப்பதற்கில்லை. பி.டி. ஆசிரியராக ஆகும்போது அந்த ஸீனியாரிடியை இந்த ஸீனியாரிடியோடு கொண்டுபோய் ஒப்பிட முடியாது. பி.டி. தகுதி பெற்று அவர்களைச் சேர்த்துக்கொள்ளும் போது அதற்குப் பிறகு பி.டி. ஆசிரியர்களைப் பொறுத்து வருகிற ஸீனியாரிடியோடு அவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

திரு. கே. என். குமாரசாமி : செகண்டரி கிரேடு ஆசிரியாகப் பணியாற்றியவர்கள் பி.ஏ., படித்து நேரடியாக உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களாகப் போவதற்குப் பதில் அவர்கள் பி.டி. ட்ரெயினிங் பெற வேண்டும் என்ற நிலைமையைத் தவிர்த்து, அவர்களுக்கு, நேரடியாகப் பதவி உயர்வு கொடுக்கும் வாய்ப்பை அரசு ஏற்படுத்துமா?